வ.மா.பொ.சே.ஆ.குழு சுற்றறிக்கை இல : **02/2021**

எனது இல : **NP/07/10/01/144**
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்,
யாழ்ப்பாணம்,
27.01.2021

செயலாளர், விவசாய அமைச்சு,
மாகாணப் பணிப்பாளர், விவசாயத்திணைக்களம்,
வடக்கு மாகாணம்.
பிரதி மாகாணப்பணிப்பாளர்கள்,
யாழ்ப்பாணம்/வவுனியா/மன்னார்/கிளிநொச்சி/முல்லைத்தீவு

## வடக்கு மாகாண பொதுச்சேவையின் விவசாய போதனாசிரியர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை – *2021*

வடக்கு மாகாண பொதுச்சேவையின் விவசாய போதனாசிரியர் தரம் III பதவியில் காணப்படும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையானது வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் அவர்களால் நடாத்தப்படும் என அறிவிக்கப்படுகின்றது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி 12.02.2021 ஆகும்.

### 02. ஆட்சேர்ப்பிற்கான சேவை நிபந்தனைகள் :-

02.1 வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட விவசாய போதனாசிரியர் சேவைப்பிரமாணக் குறிப்பு மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் விதந்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும் மற்றும் தாபனவிதிக்கோவை ஏற்பாடுகள், நிதிப்பிரமாணங்கள் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1817/30ஆம் இலக்க 2013.07.03ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவை ஆகியவற்றிற்கு உட்பட்டு, தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் குறித்த விவசாய போதனாசிரியர் பதவியின் தரம் III இற்கு நியமிக்கப்படுவர்.

02.2 இப் பரீட்சையில் சித்தி பெற்ற பரீட்சார்த்திகள் நியமனத் திகதியிலிருந்து ஓராண்டு காலம் பதில் கடமை தகுதிகாண் அடிப்படையில் நியமிக்கப்படுவர். இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். சேவைப் பிரமாணக்குறிப்பில் குறிப்பிடப்பட்டவாறு விவசாய போதனாசிரியர் பதவியில் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து 03 வருட காலத்திற்குள் முதலாவது வினைத்திறமை காண் தடைப்பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும்.

02.3 இச்சேவை இடமாற்றத்திற்குட்பட்ட சேவையாகும். இதனால் இந் நியமனம் பெறுபவர்கள் வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனைக்கும் கீழ்படிதல் வேண்டும்.

02.4 பொது நிர்வாக சுற்றறிக்கை 01/2014 மற்றும் இது தொடர்பாக தொடர்ந்து வரும் சுற்றறிக்கைகள் என்பவற்றுக்கமைய நியமனத் திகதியிலிருந்து 05 வருடங்கள் முடிவதற்கு முன்னர் குறித்துரைக்கப்பட்ட இரண்டாவது அரச கரும மொழியில் தேர்ச்சி பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

02.5 நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் அமுலுக்கு வரும் திகதி என்பன நியமன அதிகாரியினால் வரையறுக்கப்படும். அறிவிக்கப்பட்ட வெற்றிடங்கள் தொடர்பில் சில வெற்றிடங்கள் அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்பாது விடுவதற்கான அதிகாரத்தினை நியமன அதிகாரி கொண்டுள்ளார். நியமிக்கப்படவுள்ள ஆட்களின் மொத்த எண்ணிக்கை 10 ஆகும்.

### 03. சம்பள அளவுத்திட்டம் :-

பொது நிர்வாகச் சுற்றறிக்கை 03/2016க்கு அமைவான, சம்பளத் தொகுதி **MN 3 – 2016** க்கு ஏற்ப விவசாயப் போதனாசிரியர் சேவையின் தரம் - III ற்கான திரட்டிய சம்பள விகிதமானது ரூபா **31, 040 – 10 x 445 - 11 x 660 - 10 x 730 – 10 x 750 – 57, 550/-** ஆகும். (ரூபா 32,375 சம்பள படிநிலைக்கு முன் 1வது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்தி பெறல் வேண்டும்)

## 04. பொதுவான தகைமைகள் :-

04.1 விண்ணப்பதாரி ஓர் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

04.2 விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் கடமையாற்றக் கூடிய சிறந்த தேகாரோக்கியமும் சிறந்த நன்னடத்தையும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

04.3 விண்ணப்பதாரி, **விண்ணப்ப முடிவுத்திகதியன்று அல்லது அதற்கு முன்னர் சகல தகைமைகளையும்** கொண்டிருத்தல் வேண்டும்.

04.4 மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலமான ஆட்சேர்ப்பின் போது **உச்ச வயதெல்லை** ஏற்புடையதல்ல.

## 05. கல்வித் தகைமை மற்றும் ஏனைய தகைமைகள் :-

05.1 அ) கல்வித் தகைமைகள்:-

கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண தர) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் மொழி அல்லது இலக்கியம் (தமிழ் / சிங்களம் / ஆங்கிலம்), கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

ஆ) தொழில்சார் தகைமைகள் :-

1. குண்டசாலை, அக்குனகொலபிலெஸ்ஸ, பெல்வெகெர, பிபிலை, லபுதுவ, வாரியப்பொல, வவுனியா, அநுராதபுரம், கறபின்ச ஆகிய விவசாயக் கல்லூரிகளிலொன்றில் இரண்டு (02) வருட விவசாய டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

   **அல்லது**

   அம்பாறை ஹாடி தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் தொழில்நுட்ப விவசாயத்தில் டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

   **அல்லது**

   அக்குவைனாஸ் (Aquinas) கல்லூரியில்இரண்டு (02) வருட விவசாய டிப்ளோமா பெற்றிருத்தல் வேண்டும்.

   **அல்லது**

2. உயர்கல்வி அமைச்சு மற்றும் மேற்படி தொழில்நுட்பச் சான்றிதழ்களை வழங்குகின்ற நிறுவனங்களின் கருத்துக்களை அறிந்துகொண்டதன்பின் தேவை ஏற்படின் மேற்படி தொழில்நுட்பத் தகைமைகளுக்கு எல்லா வகையிலும் சமமானது என மூன்றாம்நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழுவனால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அல்லது அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதாவது தொழில்நுட்பத் தகைமைகள்.

   **அல்லது**

3. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பின்வருவனவற்றில் பெற்றுக் கொண்ட இளமாணிப் பட்டம் ஏதாவது ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - அ. விவசாய விஞ்ஞானப் பட்டதாரி [B.Sc (Agriculture)]
   - ஆ. விவசாய தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவ விஞ்ஞான பட்டதாரி [B.Sc (Agriculture Technology and Management)]
   - இ. ஏற்றுமதி விவசாய விஞ்ஞான பட்டதாரி [B.Sc (Export Agriculture)]
   - ஈ. பனைஇனத்தாவர மற்றும் இறப்பர் தொழில்நுட்ப விஞ்ஞான பட்டதாரி [B.Sc (Palm and Latex Technology)]

05.2 ஏனைய தகைமைகள் :-

**வடக்கு மாகாண தொழில்நுட்ப உதவியாளர் (விவசாய விரிவாக்கம்) சேவையில்** நிரந்தரப் பதவியை வகிப்பதுடன் அப்பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருப்பதுடன், விண்ணப்ப முடிவுத் திகதிக்கு உடன் முன்வரும் **ஐந்து (05)** வருடகாலப் பகுதியில் தொடர்ச்சியாகவும், திருப்திகரமாகவும் சேவையாற்றியுள்ளவராக இருக்க வேண்டுமென்பதுடன், அதனை திணைக்களத் தலைவர் உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டும்.

குறிப்பு :

தற்காலிக/அமைய அடிப்படையில் சேவையாற்றியுள்ள காலப்பகுதியை மேற்படி **05.2** இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெறுவதற்கான **ஐந்து (05)** ஆண்டு காலவெல்லையாக கணக்கிலெடுக்கப்படமாட்டாது.

**கவனிக்க :**

**விண்ணப்பதாரி பதவிக்குரிய எல்லாத் தகைமைகளையும்** 12.02.2021 **ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமாகும்.**

## 06. ஆட்சேர்ப்பு முறை :-

06.1 எழுத்துப் பரீட்சை மூலம் திறமை அடிப்படையிலும், ஆட்சேர்ப்பு நேரத்தில் வலுவிலுள்ள பொது நிர்வாக சுற்றறிக்கைகள், ஆட்சேர்ப்புத் திட்டம், தேசிய மற்றும் மாகாண கொள்கைகள் என்பவற்றிக்கு அமைவாகவும் ஆட்சேர்ப்பு செய்யப்படும். இவ்வறிவித்தலில் கோரப்பட்ட தகைமைகள் யாவும் நேர்முகப் பரீட்சையின் போது பரிசீலிக்கப்படும். ஆயினும் இதன் போது புள்ளிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது. தேவையான தகைமைகள் இல்லையெனத் தெரியவந்தால் இப் பதவிக்கான உரிமைகள் இரத்துச் செய்யப்படும்.

06.2 மேற்படி தகைமையடைந்துள்ள விண்ணப்பதாரிகளிலிருந்து, எழுத்துப்பரீட்சையில் தகைமைபெறும் பரீட்சார்த்திகள் பெற்ற மொத்தப்புள்ளிகளின் வரிசை ஒழுங்கில் நியமனத்திற்கான நேர்முகத் தேர்விற்கு தெரிவு செய்யப்படுவர்.

06.1 வெற்றிடத்தின் 03% விசேட தேவையுடையோருக்காக (மாற்றுத்திறனாளிகளுக்காக) ஒதுக்கப்படும். பரீட்சார்த்தி நியமனத்திற்காக தெரிவுசெய்யப்படும் போது குறித்த பதவியில் கடமையாற்றுவதற்கு தனது விசேட தேவையுடைய தன்மையானது (Disability) தடையாக அமையாது என்பதனை விசேட மருத்துவப் பரிசோதனை அறிக்கை மூலம் நிருபித்தல் வேண்டும். எனினும் விசேட தேவையுடைய பரீட்சார்த்தி ஒருவர் நியமனத்திற்காக தகைமை பெறுவது எழுத்துப் பரீட்சையில் வேண்டப்பட்ட புள்ளிகளைப் பெற்றுக் கொள்வதன் அடிப்படையிலாகும்.

## 07. பரீட்சைக் கட்டணம் :-

விண்ணப்பதாரி வதியும் வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகமொன்றில 500/-ரூபாவை **வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளர்** அவர்களின் **"3401"** என்ற வைப்புக் கணக்கிற்குச் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவத்தில் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. இக் கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

## 08. விண்ணப்பிக்கும் முறை :-

08.1 இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைவாக A4 அளவிலான (21செ.மீ x 29செ.மீ) தாளின் 1 முதல் 4.4 வரையான பந்திகள் முதலாம் பக்கத்திலும், 4.5 முதல் 7.0 வரையான பந்திகள் இரண்டாம் பக்கத்திலும் ஏனையவை மூன்றாம் பக்கத்திலும் உள்ளடங்கும் வண்ணம் விண்ணப்பப் படிவத்தைத் தயாரித்தல் வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பத்தை 12.02.2021ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல:393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

08.2 அனுப்பிவைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"வடக்கு மாகாண பொதுச்சேவையின் விவசாய போதனாசிரியர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை –2021"** எனக் குறிப்பிடப்படல் வேண்டும்

08.3 விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக் கொள்ளல் பயனுள்ளதாகும். விண்ணப்பத்தின் நிழற்படப்பிரதி மற்றும் முன்னோடிப்பிரதி என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பரீட்சைக்கான அனுமதி அட்டை மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளர் அவர்களினால் அனுப்பிவைக்கப்படும். பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பிவைக்கப்படலானது விண்ணப்பதாரி சகல தகைமைகளையும் கொண்டுள்ளார் எனக்கருதப்படலாகாது.

08.4 விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் பரீட்சைத் திகதிக்கு குறைந்த பட்சம் 03 நாட்களுக்கு முன்னராவது அனுமதி அட்டை கிடைக்காவிடின், அனுமதி அட்டை கிடைக்காமைபற்றி பின்வரும் விபரங்களுடன் **“செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல:393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்”** எனும் முகவரிக்கு அறிவிக்க வேண்டும். (தொலைபேசி இல – 021 221 9939, தொலைநகல் இல - 021 221 9940)

**தொடர்பு கொள்ளும்போது சமர்ப்பிக்கப்பட வேண்டிய விபரங்கள்:-**
**கோரிக்கைக் கடிதம், விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப்பிரதி, மற்றும் பரீட்சைக்கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி, அனுமதி அட்டை அனுப்பி வைப்பதற்கான தொலைநகல் இலக்கம்.**

## 09. ஆள் அடையாளத்தை நிரூபித்தல் :-

பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை
(ii) செல்லுபடியான இலங்கை கடவுச்சீட்டு.
(iii) செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்.

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணமொன்றை சமர்ப்பிக்கத்தவறும் பரீட்சார்த்தியொருவரின் பரீட்சார்த்தி உரிமை **செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்** அவர்களின் தற்றுணிபின்படி இரத்துச் செய்யப்படலாம். பரீட்சை நடாத்துதல் தொடர்பாக வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும்.

## 10.பொய்யான தகவல்களுக்கான தண்டனை :-

விண்ணப்பப்பத்திரங்களைப் பூர்த்தி செய்யும் போது மிகக்கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சை விதிகளின்படி எவரேனும் விண்ணப்பதாரியொருவர் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்பத்திலாவது தகைமையற்றவர் எனத் தெரியவருமாயின், அவரது பரீட்சார்த்தியுரிமை அச்சந்தர்ப்பத்தில் இரத்துச் செய்யப்படும். விண்ணப்பரதாரி சமர்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் பொய்யானதெனத் தெரியவரும் எச்சந்தா்ப்பத்திலும் அவா் மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

## 11.பரீட்சைத் திட்டம் :-

இவ் எழுத்துப் பரீட்சையானது கீழ்க் குறிப்பிட்டவாறான வினாத்தாள்களைக் கொண்டிருக்கும் என்பதுடன். இப்பரீட்சை தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய இரு மொழிகளில் நடாத்தப்படும். விண்ணபித்த மொழியை பின்னா் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

| *இல* | *வினாப் பத்திரம்* | *பாட விதானம்* | *நேரம்* | *புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| 01 | உளச்சார்புப் பரீட்சை | இவ் வினாத்தாள் தர்க்கரீதியான திறன், பகுப்பாய்வுத் திறன், முடிவெடுக்கும் இயலுமை, முடிவுக்குவரும் திறன். எண், மொழி மற்றும் உருவ அமைப்பு ஆகியவற்றிற்கு இடையேயான தொடர்புகள் மற்றும் பிரச்சனைகளை சமாளிக்க வேண்டிய விதம் தொடர்பாக விண்ணப்பதாரியின் அறிவினை அளவிடுவதாக அமையும். | 01 மணித்தியாலம் | 100 |
| 02 | தொழில்நுட்ப ஆய்வுப் பரீட்சை | இவ் வினாத்தாள் விவசாயம் தொடர்பான புத்தாக்கச் சிந்தனைகள் மற்றும் பிரச்சனைகளை தீர்க்கும் திறன் ஆகியவை தொடர்பான விண்ணப்பதாரியின் அறிவினை அளவிடுவதாக அமையும். | 01 மணித்தியாலம் | 100 |

குறிப்பு :-

இப்பரீட்சை ஒரு போட்டிப் பரீட்சையாக இருப்பதால் நேர்முகத் தேர்விற்கு தகைமை பெறுவதற்காக ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் குறைந்தபட்சம் நாற்பது வீதத்தை (40%) பரீட்சார்த்திகள் பெற்றுக்கொள்ள வேண்டும். நேர்முகப் பரீட்சையின் போது விண்ணப்பதாரிகள் இப் போட்டிப் பரீட்சையில் பெற்ற மொத்தப் புள்ளிகளின் உயர்புள்ளி வரிசை ஒழுங்கு (Merit Order) கருத்தில் கொள்ளப்படும்.

12. **பரீட்சைப் பெறுபேறுகள்** :-

பரீட்சார்த்திகளுக்கான பரீட்சைப் பெறுபேறுகள் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் அவர்களால் www.np.gov.lk என்ற வடக்கு மாகாணசபையின் இணையத்தளம் மூலம் வெளியிடப்படுவதுடன் பரீட்சைக்குத் தோற்றிய ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் தபால் மூலமாக அனுப்பிவைக்கப்படும்.

13. இப் பரீட்சையை நடாத்துதல் அல்லது இரத்து செய்தல் தொடர்பான அதிகாரம் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு உண்டு. இவ் விளம்பரத்தில் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில் தமிழ் மொழி உரையே மேலோங்குதல் வேண்டும்.

**சி.திருவாகரன்.**
செயலாளர்,
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
27.01.2021

வ.மா.பொ.சே.ஆ.குழு சுற்றறிக்கை இல : **02/2021**

எனது இல : **NP/07/10/01/144**
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்,
யாழ்ப்பாணம்,
27.01.2021

செயலாளர், விவசாய அமைச்சு,
மாகாணப் பணிப்பாளர், விவசாயத்திணைக்களம்,
வடக்கு மாகாணம்.
பிரதி மாகாணப்பணிப்பாளர்கள்,
யாழ்ப்பாணம்/வவுனியா/மன்னார்/கிளிநொச்சி/முல்லைத்தீவு

## வடக்கு மாகாண பொதுச்சேவையின் விவசாய போதனாசிரியர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை – *2021*

வடக்கு மாகாண பொதுச்சேவையின் விவசாய போதனாசிரியர் தரம் III பதவியில் காணப்படும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையானது வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் அவர்களால் நடாத்தப்படும் என அறிவிக்கப்படுகின்றது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி 12.02.2021 ஆகும்.

### 02. ஆட்சேர்ப்பிற்கான சேவை நிபந்தனைகள் :-

02.1 வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட விவசாய போதனாசிரியர் சேவைப்பிரமாணக் குறிப்பு மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் விதந்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும் மற்றும் தாபனவிதிக்கோவை ஏற்பாடுகள், நிதிப்பிரமாணங்கள் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1817/30ஆம் இலக்க 2013.07.03ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவை ஆகியவற்றிற்கு உட்பட்டு, தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் குறித்த விவசாய போதனாசிரியர் பதவியின் தரம் III இற்கு நியமிக்கப்படுவர்.

02.2 இப் பரீட்சையில் சித்தி பெற்ற பரீட்சார்த்திகள் நியமனத் திகதியிலிருந்து ஓராண்டு காலம் பதில் கடமை தகுதிகாண் அடிப்படையில் நியமிக்கப்படுவர். இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். சேவைப் பிரமாணக்குறிப்பில் குறிப்பிடப்பட்டவாறு விவசாய போதனாசிரியர் பதவியில் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து 03 வருட காலத்திற்குள் முதலாவது வினைத்திறமை காண் தடைப்பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும்.

02.3 இச்சேவை இடமாற்றத்திற்குட்பட்ட சேவையாகும். இதனால் இந் நியமனம் பெறுபவர்கள் வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனைக்கும் கீழ்படிதல் வேண்டும்.

02.4 பொது நிர்வாக சுற்றறிக்கை 01/2014 மற்றும் இது தொடர்பாக தொடர்ந்து வரும் சுற்றறிக்கைகள் என்பவற்றுக்கமைய நியமனத் திகதியிலிருந்து 05 வருடங்கள் முடிவதற்கு முன்னர் குறித்துரைக்கப்பட்ட இரண்டாவது அரச கரும மொழியில் தேர்ச்சி பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

02.5 நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் அமுலுக்கு வரும் திகதி என்பன நியமன அதிகாரியினால் வரையறுக்கப்படும். அறிவிக்கப்பட்ட வெற்றிடங்கள் தொடர்பில் சில வெற்றிடங்கள் அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்பாது விடுவதற்கான அதிகாரத்தினை நியமன அதிகாரி கொண்டுள்ளார். நியமிக்கப்படவுள்ள ஆட்களின் மொத்த எண்ணிக்கை 10 ஆகும்.

### 03. சம்பள அளவுத்திட்டம் :-

பொது நிர்வாகச் சுற்றறிக்கை 03/2016க்கு அமைவான, சம்பளத் தொகுதி **MN 3 – 2016** க்கு ஏற்ப விவசாயப் போதனாசிரியர் சேவையின் தரம் - III ற்கான திரட்டிய சம்பள விகிதமானது ரூபா **31, 040 – 10 x 445 - 11 x 660 - 10 x 730 – 10 x 750 – 57, 550/-** ஆகும். (ரூபா 32,375 சம்பள படிநிலைக்கு முன் 1வது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்தி பெறல் வேண்டும்)

## 04. பொதுவான தகைமைகள் :-

04.1 விண்ணப்பதாரி ஓர் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

04.2 விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் கடமையாற்றக் கூடிய சிறந்த தேகாரோக்கியமும் சிறந்த நன்னடத்தையும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

04.3 விண்ணப்பதாரி, **விண்ணப்ப முடிவுத்திகதியன்று அல்லது அதற்கு முன்னர் சகல தகைமைகளையும்** கொண்டிருத்தல் வேண்டும்.

04.4 மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலமான ஆட்சேர்ப்பின் போது **உச்ச வயதெல்லை** ஏற்புடையதல்ல.

## 05. கல்வித் தகைமை மற்றும் ஏனைய தகைமைகள் :-

05.1 அ) கல்வித் தகைமைகள்:-

கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண தர) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் மொழி அல்லது இலக்கியம் (தமிழ் / சிங்களம் / ஆங்கிலம்), கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

ஆ) தொழில்சார் தகைமைகள் :-

1. குண்டசாலை, அக்குனகொலபிலெஸ்ஸ, பெல்வெகெர, பிபிலை, லபுதுவ, வாரியப்பொல, வவுனியா, அநுராதபுரம், கறபின்ச ஆகிய விவசாயக் கல்லூரிகளிலொன்றில் இரண்டு (02) வருட விவசாய டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது**

அம்பாறை ஹாடி தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் தொழில்நுட்ப விவசாயத்தில் டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது**

அக்குவைனாஸ் (Aquinas) கல்லூரியில்இரண்டு (02) வருட விவசாய டிப்ளோமா பெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது**

2. உயர்கல்வி அமைச்சு மற்றும் மேற்படி தொழில்நுட்பச் சான்றிதழ்களை வழங்குகின்ற நிறுவனங்களின் கருத்துக்களை அறிந்துகொண்டதன்பின் தேவை ஏற்படின் மேற்படி தொழில்நுட்பத் தகைமைகளுக்கு எல்லா வகையிலும் சமமானது என மூன்றாம்நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழுவனால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அல்லது அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதாவது தொழில்நுட்பத் தகைமைகள்.

**அல்லது**

3. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பின்வருவனவற்றில் பெற்றுக் கொண்ட இளமாணிப் பட்டம் ஏதாவது ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   அ. விவசாய விஞ்ஞானப் பட்டதாரி [B.Sc (Agriculture)]
   ஆ. விவசாய தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவ விஞ்ஞான பட்டதாரி [B.Sc (Agriculture Technology and Management)]
   இ. ஏற்றுமதி விவசாய விஞ்ஞான பட்டதாரி [B.Sc (Export Agriculture)]
   ஈ. பனைஇனத்தாவர மற்றும் இறப்பர் தொழில்நுட்ப விஞ்ஞான பட்டதாரி [B.Sc (Palm and Latex Technology)]

05.2 ஏனைய தகைமைகள் :-

**வடக்கு மாகாண தொழில்நுட்ப உதவியாளர் (விவசாய விரிவாக்கம்) சேவையில்** நிரந்தரப் பதவியை வகிப்பதுடன் அப்பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருப்பதுடன், விண்ணப்ப முடிவுத் திகதிக்கு உடன் முன்வரும் **ஐந்து (05)** வருடகாலப் பகுதியில் தொடர்ச்சியாகவும், திருப்திகரமாகவும் சேவையாற்றியுள்ளவராக இருக்க வேண்டுமென்பதுடன், அதனை திணைக்களத் தலைவர் உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டும்.

குறிப்பு :

தற்காலிக/அமைய அடிப்படையில் சேவையாற்றியுள்ள காலப்பகுதியை மேற்படி **05.2** இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெறுவதற்கான **ஐந்து (05)** ஆண்டு காலவெல்லையாக கணக்கிலெடுக்கப்படமாட்டாது.

**கவனிக்க :**

**விண்ணப்பதாரி பதவிக்குரிய எல்லாத் தகைமைகளையும்** 12.02.2021 **ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமாகும்.**

## 06. ஆட்சேர்ப்பு முறை :-

06.1 எழுத்துப் பரீட்சை மூலம் திறமை அடிப்படையிலும், ஆட்சேர்ப்பு நேரத்தில் வலுவிலுள்ள பொது நிர்வாக சுற்றறிக்கைகள், ஆட்சேர்ப்புத் திட்டம், தேசிய மற்றும் மாகாண கொள்கைகள் என்பவற்றிக்கு அமைவாகவும் ஆட்சேர்ப்பு செய்யப்படும். இவ்வறிவித்தலில் கோரப்பட்ட தகைமைகள் யாவும் நேர்முகப் பரீட்சையின் போது பரிசீலிக்கப்படும். ஆயினும் இதன் போது புள்ளிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது. தேவையான தகைமைகள் இல்லையெனத் தெரியவந்தால் இப் பதவிக்கான உரிமைகள் இரத்துச் செய்யப்படும்.

06.2 மேற்படி தகைமையடைந்துள்ள விண்ணப்பதாரிகளிலிருந்து, எழுத்துப்பரீட்சையில் தகைமைபெறும் பரீட்சார்த்திகள் பெற்ற மொத்தப்புள்ளிகளின் வரிசை ஒழுங்கில் நியமனத்திற்கான நேர்முகத் தேர்விற்கு தெரிவு செய்யப்படுவர்.

06.1 வெற்றிடத்தின் 03% விசேட தேவையுடையோருக்காக (மாற்றுத்திறனாளிகளுக்காக) ஒதுக்கப்படும். பரீட்சார்த்தி நியமனத்திற்காக தெரிவுசெய்யப்படும் போது குறித்த பதவியில் கடமையாற்றுவதற்கு தனது விசேட தேவையுடைய தன்மையானது (Disability) தடையாக அமையாது என்பதனை விசேட மருத்துவப் பரிசோதனை அறிக்கை மூலம் நிரூபித்தல் வேண்டும். எனினும் விசேட தேவையுடைய பரீட்சார்த்தி ஒருவர் நியமனத்திற்காக தகைமை பெறுவது எழுத்துப் பரீட்சையில் வேண்டப்பட்ட புள்ளிகளைப் பெற்றுக் கொள்வதன் அடிப்படையிலாகும்.

## 07. பரீட்சைக் கட்டணம் :-

விண்ணப்பதாரி வதியும் வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகமொன்றில 500/-ரூபாவை **வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளர்** அவர்களின் **"3401"** என்ற வைப்புக் கணக்கிற்குச் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவத்தில் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. இக் கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

## 08. விண்ணப்பிக்கும் முறை :-

08.1 இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைவாக A4 அளவிலான (21செ.மீ x 29செ.மீ) தாளின் 1 முதல் 4.4 வரையான பந்திகள் முதலாம் பக்கத்திலும், 4.5 முதல் 7.0 வரையான பந்திகள் இரண்டாம் பக்கத்திலும் ஏனையவை மூன்றாம் பக்கத்திலும் உள்ளடங்கும் வண்ணம் விண்ணப்பப் படிவத்தைத் தயாரித்தல் வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பத்தை 12.02.2021ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல:393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

08.2 அனுப்பிவைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"வடக்கு மாகாண பொதுச்சேவையின் விவசாய போதனாசிரியர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை –2021"** எனக் குறிப்பிடப்படல் வேண்டும்

08.3 விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக் கொள்ளல் பயனுள்ளதாகும். விண்ணப்பத்தின் நிழற்படப்பிரதி மற்றும் முன்னோடிப்பிரதி என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பரீட்சைக்கான அனுமதி அட்டை மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளர் அவர்களினால் அனுப்பிவைக்கப்படும். பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பிவைக்கப்படலானது விண்ணப்பதாரி சகல தகைமைகளையும் கொண்டுள்ளார் எனக்கருதப்படலாகாது.

08.4 விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் பரீட்சைத் திகதிக்கு குறைந்த பட்சம் 03 நாட்களுக்கு முன்னராவது அனுமதி அட்டை கிடைக்காவிடின், அனுமதி அட்டை கிடைக்காமைபற்றி பின்வரும் விபரங்களுடன் **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல:393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு அறிவிக்க வேண்டும். (தொலைபேசி இல – 021 221 9939, தொலைநகல் இல - 021 221 9940)

**தொடர்பு கொள்ளும்போது சமர்ப்பிக்கப்பட வேண்டிய விபரங்கள்:-**

**கோரிக்கைக் கடிதம், விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப்பிரதி, மற்றும் பரீட்சைக்கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி, அனுமதி அட்டை அனுப்பி வைப்பதற்கான தொலைநகல் இலக்கம்.**

## 09. ஆள் அடையாளத்தை நிரூபித்தல் :-

பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை
(ii) செல்லுபடியான இலங்கை கடவுச்சீட்டு.
(iii) செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்.

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணமொன்றை சமர்ப்பிக்கத்தவறும் பரீட்சார்த்தியொருவரின் பரீட்சார்த்தி உரிமை **செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்** அவர்களின் தற்றுணிபின்படி இரத்துச் செய்யப்படலாம். பரீட்சை நடாத்துதல் தொடர்பாக வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும்.

## 10.பொய்யான தகவல்களுக்கான தண்டனை :-

விண்ணப்பப்பத்திரங்களைப் பூர்த்தி செய்யும் போது மிகக்கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சை விதிகளின்படி எவரேனும் விண்ணப்பதாரியொருவர் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்பத்திலாவது தகைமையற்றவர் எனத் தெரியவருமாயின், அவரது பரீட்சார்த்தியுரிமை அச்சந்தர்ப்பத்தில் இரத்துச் செய்யப்படும். விண்ணபரதாரி சமர்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் பொய்யானதெனத் தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

## 11.பரீட்சைத் திட்டம் :-

இவ் எழுத்துப் பரீட்சையானது கீழ்க் குறிப்பிட்டவாறான வினாத்தாள்களைக் கொண்டிருக்கும் என்பதுடன். இப்பரீட்சை தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய இரு மொழிகளில் நடாத்தப்படும். விண்ணபித்த மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

| *இல* | *வினாப் பத்திரம்* | *பாட விதானம்* | *நேரம்* | *புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| 01 | உளச்சார்புப் பரீட்சை | இவ் வினாத்தாள் தர்க்கரீதியான திறன், பகுப்பாய்வுத் திறன், முடிவெடுக்கும் இயலுமை, முடிவுக்குவரும் திறன். எண், மொழி மற்றும் உருவ அமைப்பு ஆகியவற்றிற்கு இடையேயான தொடர்புகள் மற்றும் பிரச்சனைகளை சமாளிக்க வேண்டிய விதம் தொடர்பாக விண்ணப்பதாரியின் அறிவினை அளவிடுவதாக அமையும். | 01 மணித்தியாலம் | 100 |
| 02 | தொழில்நுட்ப ஆய்வுப் பரீட்சை | இவ் வினாத்தாள் விவசாயம் தொடர்பான புத்தாக்கச் சிந்தனைகள் மற்றும் பிரச்சனைகளை தீர்க்கும் திறன் ஆகியவை தொடர்பான விண்ணப்பதாரியின் அறிவினை அளவிடுவதாக அமையும். | 01 மணித்தியாலம் | 100 |

குறிப்பு :-

இப்பரீட்சை ஒரு போட்டிப் பரீட்சையாக இருப்பதால் நேர்முகத் தேர்விற்கு தகைமை பெறுவதற்காக ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் குறைந்தபட்சம் நாற்பது வீதத்தை (40%) பரீட்சார்த்திகள் பெற்றுக்கொள்ள வேண்டும். நேர்முகப் பரீட்சையின் போது விண்ணப்பதாரிகள் இப் போட்டிப் பரீட்சையில் பெற்ற மொத்தப் புள்ளிகளின் உயர்புள்ளி வரிசை ஒழுங்கு (Merit Order) கருத்தில் கொள்ளப்படும்.

## 12. பரீட்சைப் பெறுபேறுகள் :-

பரீட்சார்த்திகளுக்கான பரீட்சைப் பெறுபேறுகள் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் அவர்களால் www.np.gov.lk என்ற வடக்கு மாகாணசபையின் இணையத்தளம் மூலம் வெளியிடப்படுவதுடன் பரீட்சைக்குத் தோற்றிய ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் தபால் மூலமாக அனுப்பிவைக்கப்படும்.

13. இப் பரீட்சையை நடாத்துதல் அல்லது இரத்து செய்தல் தொடர்பான அதிகாரம் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு உண்டு. இவ் விளம்பரத்தில் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில் தமிழ் மொழி உரையே மேலோங்குதல் வேண்டும்.

**சி.திருவாகரன்.**
செயலாளர்,
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
27.01.2021